அரசுப் பணியாளர் தேர்வாணையம்
தபால்
3 - ஆக 2009

063754

**சுருக்கம்**

சட்டக்கல்வி – வேலைவாய்ப்பு – பல்கலைக் கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட எந்த ஒரு பல்கலைக் கழகத்தாலோ அல்லது தமிழ்நாடு டாக்டர் அம்பேதகா சட்டப் பல்கலைக் கழகத்தாலோ 5 வருட சட்டப் படிப்பில் வழங்கப்படும் பி.ஏ.(சட்டம்) பட்டத்தினை இளங்கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் இளநிலை பட்டப்படிப்புகளுக்கு (B.A., B.Sc., B.Com.) இணையானதாகவும் பி.எல். பட்டத்தினை, ஏதேனும் ஒரு பட்டம் மற்றும் சட்டத்தில் ஒரு பட்டம் என்ற தகுதிக்கு இணையானதாகவும் கருதுதல் தொடர்பான ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சட்ட (சக)த் துறை**

அரசாணை (நிலை) எண். 184

நாள். 30.07.2009

படிக்கப்பட்டது.

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் மற்றும் செயலாளர் (பொறுப்பு),
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
கடிதம் எண்.6784/வி.ம.அ.து–ஊ1/2008, நாள் 28.04.2009

– – – –

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்/செயலாளர்(பொறுப்பு) அவர்கள் பல்கலைக்கழக மானியக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தால் 5 வருட சட்டப்படிப்பில் முதல் 3 ஆண்டுகளை முழுமையாக நிறைவு செய்பவர்களுக்கு வழங்கப்படும் பி.ஏ.(சட்டம்) பட்டத்தை இளங்கலை மற்றும் அறிவியல் இளநிலை பட்டப்படிப்புகளுக்கு (பி.ஏ., பி.எஸ்.,சி) இணையானதாகக் கருதியும், 5 வருட சட்டப்படிப்பினை முடித்த பிறகு சட்டப்படிப்பில் இளநிலை பட்டம் பெற்றவர்கள் (பி.எல்.பட்டம்) சட்டப்படிப்பில் (Degree in Law) பட்டம் பெற்றுள்ளதாகக் கருதியும் பொதுப்பணியில் வேலை வாய்ப்பிற்காக அங்கீகரிக்கலாம் என்ற தீர்மானம் 22.04.2009 அன்று நடைபெற்ற இணைக்கல்வித் தகுதி நிர்ணயப் பரிசீலிப்பு குழுக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றும் இது தொடர்பாக ஆணை வெளியிடுமாறும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேற்கண்ட தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் மற்றும் செயலாளர்(பொறுப்பு), தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அவர்களின் கோரிக்கையை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்றுக் கொள்ள முடிவு செய்து, வேலை வாய்ப்பிற்காக பல்கலைக் கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட எந்த ஒரு பல்கலைக் கழகத்தாலோ அல்லது தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தாலோ

5 வருட சட்டப் படிப்பில் முதல் 3 ஆண்டுகளை முழுமையாக நிறைவு செய்தபின் வழங்கப்படும் பி.ஏ.(சட்டம்) [B.A., (Law)] பட்டத்தை இளங்கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் இளநிலை பட்டப்படிப்புகளுக்கு (B.A., B.Sc., B.Com.) இணையானதாக கருதிடவும், 5 வருட சட்டப் படிப்பினை முழுமையாக நிறைவு செய்த பின் வழங்கப்படும் பி எல். பட்டத்தினை ஏதேனும் ஒரு பட்டம் மற்றும் சட்டத்தில் ஒரு பட்டம் என்ற தகுதிக்கு இணையானதாகக் கருதிடவும் அரசு அங்கீகரித்து ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச. தீனதயாளன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:

1) செயலாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை – 600 002.
2) சட்டக் கல்வி இயக்குநர், கீழ்பாக்கம், சென்னை– 600 010.
3) பதிவாளர்(பொறுப்பு), தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம், சென்னை – 600 028.
4) பதிவாளர்கள் அனைத்து பல்கலைக்கழகங்கள்.

நகல்:

1) பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, சென்னை – 600 009.
2) இ.கோ./உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.